வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் – சரவணகுமார்

தேதி 10.12.2024 நேரம் மாலை 6.10 மணி

---

<u>தலைப்புச் செய்திகள்</u>

- வறுமை மற்றும் பட்டினி ஒழிப்பு, இளைஞர்களுக்கு சம வாய்ப்பு போன்ற திட்டங்களை செயல்படுத்துவதன் மூலம் இந்தியா, உலகிற்கே, முன்னோடியாக திகழ்வதாக, குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, பெருமிதம் தெரிவித்துள்ளார்.
- எதிர்கட்சிகளின் கோரிக்கைகளை விவாதிக்கக் கோரி உறுப்பினர்கள் தொடர்ந்து அமளியில் ஈடுபட்டதால், நாடாளுமன்றத்தின் இருஅவைகளும் நாளை வரை ஒத்தி வைக்கப்பட்டது.
- பெண்களுக்கு அதிகாரம் அளிக்கும் திட்டங்களை மத்திய அரசு செயல்படுத்தி வருவதாக, மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீத்தாராமன் தெரிவித்துள்ளார்.
- புதுச்சேரியில், 28ஆவது தேசிய புத்தக கண்காட்சி, வரும் 13ஆம் தேதி முதல் 10 நாட்கள் நடைபெற உள்ளது.

---

<u>குடியரசுத் தலைவர் (16)</u>

வறுமை மற்றும் பட்டினி ஒழிப்பு, இளைஞர்களுக்கு சம வாய்ப்பு போன்ற திட்டங்களை செயல்படுத்துவதன் மூலம் இந்தியா, உலகிற்கே, முன்னோடியாக திகழ்வதாக, குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, பெருமிதம் தெரிவித்துள்ளார். அவர் இன்று புதுடெல்லியில், தேசிய மனித உரிமைகள் ஆணையம் சார்பில் நடைபெற்ற மனித உரிமைகள் தின நிகழ்ச்சியில் பங்கேற்று பேசினார். சைபர் குற்றமும், பருவநிலை மாற்றமும், மனித உரிமைகளுக்கு புதிய அச்சுறுத்தலாக உள்ளது என்றும்,

அவர் தெரிவித்தார். டிஜிட்டல் சகாப்தம் மாறக்கூடியது என்றாலும், இது, இணைய மிரட்டல், தனி உரிமை கவலைகள், மற்றும், தவறான தகவல்களின் பரவல் போன்ற சிக்கல்களை கொண்டு வந்துள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். இந்தியா, 5 ஆயிரத்திற்கும் மேலான பாரம்பரியத்தை பின்பற்றும் நாடு என்றும் அவர் கூறினார். இணக்கமான சமூகத்திற்கு தேவையான இரக்கம், தனி மனிதர்களின் மதிப்பு ஆகியவற்றை இந்தியா நீண்டகாலமாக நிலை நிறுத்தி உள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். இந்நிகழ்ச்சியில், தேசிய மனித உரிமை ஆணையத்தின் 3 வெளியீடுகளையும் அவர் வெளியிட்டார்.

----------------------------------

*__நாடாளுமன்ற கூட்டத் தொடர் 1 (17)__*

எதிர்கட்சிகளின் தொடர் அமளியால் நாடாளுமன்ற நடவடிக்கைகள் நாளை வரை ஒத்தி வைக்கப்பட்டது. நாடாளுமன்ற குளிர்காலக் கூட்டத் தொடர் தொடங்கியது முதல் எதிர்கட்சி உறுப்பினர்கள், பல்வேறு பிரச்சனைகளை எழுப்பி, தொடர் அமளியில் ஈடுபட்டனர். மக்களவை இன்று காலை கூடியதும், எதிர்கட்சி உறுப்பினர்கள் அலுவல்களை ஒத்தி வைத்துவிட்டு, விவாதிக்கக் கோரி நோட்டீஸ் அனுப்பினர். இதை ஏற்க அவைத் தலைவர் திரு. ஓம் பிர்லா மறுப்பு தெரிவித்தார். முன்னதாக தொடர் அமளி குறித்து அதிருப்தி வெளியிட்ட அவைத் தலைவர், அவை விதிகளை அனைத்து உறுப்பினர்களும் கடைபிடிக்க வேண்டும் என கூறினார். மக்களின் கோரிக்கைகள் மற்றும் எதிர்பார்ப்புகளை பூர்த்தி செய்ய, அனைவரும் உழைக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். இதையடுத்து எதிர்கட்சி உறுப்பினர்கள் தொடர்ந்து அமளியில் ஈடுபட்டதால், அவை நண்பகல் வரை ஒத்தி வைக்கப்பட்டது. மீண்டும் அவை கூடியதும் அமளி தொடர்ந்ததால், நாள் பின்னர் நாள் முழுவதும் ஒத்தி வைக்கப்பட்டது. இதேபோல், மாநிலங்களவையிலும் எதிர்கட்சி உறுப்பினர்கள் தொடர் முழக்கமிட்டதால், அவை நடவடிக்கைகள் நாளை வரை ஒத்தி வைக்கப்பட்டன.

நாடாளுமன்ற கூட்டத் தொடர் 2 (4)

முன்னதாக, மாநிலங்களவையில் கர்நாடக முன்னாள் முதலமைச்சரும், முன்னாள் மத்திய வெளியுறவுத் துறை அமைச்சருமான எஸ்.எம் கிருஷ்ணாவிற்கு இரங்கல் தெரிவித்து, மறைவுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில், மவுன அஞ்சலி செலுத்தப்பட்டது.

----------------------------------

நாடாளுமன்றம் – கிரண் ரிஜிஜூ (12)

நாடாளுமன்ற ஜனநாயகத்தின் மீது, எதிர்கட்சி தலைவர் திரு. ராகுல்காந்திக்கு நம்பிக்கை இல்லை என, நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு. கிரண் ரிஜிஜூ தெரிவித்துள்ளார். புதுடெல்லியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், நாடாளுமன்ற நடவடிக்கைகள் சுமூகமாக நடைபெற வேண்டியது அவசியம் என்றும் வலியுறுத்தினார். விவாதங்களில், எதிர்கட்சி உறுப்பினர்கள் கவனம் செலுத்த வேண்டியது அவசியம் என்றும் அவர் குறிப்பிட்டார். சமாஜ்வாதி, திரிணாமுல் காங்கிரஸ் உட்பட பல கட்சிகளின் உறுப்பினர்கள் அவையில் ஆக்கப்பூர்வமான விவாதங்களை நடத்த விருப்பம் தெரிவித்துள்ளதாகவும், ஆனால், மக்களவை எதிர்கட்சித் தலைவர் திரு. ராகுல்காந்திக்கு, நாடாளுமன்ற ஜனநாயகத்தின் மீது நம்பிக்கை இல்லை என்றும், திரு. கிரண் ரிஜிஜூ குற்றம் சாட்டினார்.

----------------------------------

டிஜிட்டல் வேளாண்மை (8)

பயிர்கள், வானிலை மற்றும் நீர் குறித்த தகவல்களை சேகரிக்க, 2 ஆயிரத்து 817 கோடி ரூபாய் செலவில் டிஜிட்டல் வேளாண்மை திட்டத்திற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளதாக, மத்திய அரசு இன்று தெரிவித்துள்ளது. இதுதொடர்பாக மக்களவையில் கேள்வி ஒன்றுக்கு எழுத்துப்பூர்வமாக பதில் அளித்த மத்திய விவசாயம் மற்றும் விவசாயிகள் நலத்துறை அ மைச்சர் திரு. சிவராஜ் சிங் சவுகான், திரு.

நரேந்திர மோடி அரசின் 100 நாட்களின் போது, விவசாயிகளுக்காக பல குறிப்பிடத்தக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

-----------------------------------

<u>ராஜ்நாத் சிங்</u> (15)

இந்தியா-ரஷ்யா இடையே, ராணுவம் மற்றும் ராணுவ தொழில்நுட்பம் குறித்து, இருநாட்டு பாதுகாப்பு அமைச்சர்களும் இன்று ஆலோசனை நடத்துகின்றனர். 3 நாள் அரசுமுறை பயணமாக ரஷ்யா சென்றுள்ள மத்திய பாதுகாப்பு அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங், மாஸ்கோவில் நடைபெறும் இந்த கூட்டத்தில் கலந்து கொண்டு, இருநாடுகளுக்கு இடையே, ராணுவம் மற்றும் பாதுகாப்பு ஒத்துழைப்பு குறித்தும், அவர் தமது கருத்துக்களை எடுத்துரைக்கிறார். மேலும், தற்போதைய உலகளாவிய பிரச்சனைகள் குறித்தும், இருநாட்டு நட்புறவு குறித்தும் அவர் அந்நாட்டு பாதுகாப்பு துறை அமைச்சருடன் விவாதிக்கிறார். முன்னதாக, நேற்று பாதுகாப்புத் துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங், கடற்படை தளத்தில் இந்தியாவின் ஏவுகணை போர்க் கப்பலான ஐஎன்எஸ் துஷிலை இந்தியாவிடம் ஒப்படைக்கும் நிகழ்ச்சியில் பங்கேற்றார். இந்த கப்பல் இந்தியாவின் கடல்சார் வலிமையை பாதுகாப்பதாகவும், இந்தியா-ரஷ்யாவின் நீண்டகால நட்பை பறைசாற்றுவதாகவும், திரு. ராஜ்நாத் சிங் பெருமிதம் தெரிவித்துள்ளார்.

---------------------------------

<u>பிரதமர் மோடி</u> (10)

மக்களுக்கு உயர்தர கட்டமைப்பு வசதிகளை உறுதி செய்ய மத்திய அரசு பல நடவடிக்கைகளை எடுத்து வருவதாக, பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார். உத்தரபிரதேச மாநிலம் நொய்டாவில் அமைக்கப்பட்டுள்ள சர்வதேச விமான நிலையத்தில், முதல் விமானம் தரையிறங்கும் சோதனை ஓட்டம் நேற்று நடைபெற்றது. இதுகுறித்து தமது சமூக வலைதளப் பதிவில் பதிவிட்டுள்ள பிரதமர் திரு. நரேந்திர மோடி,

தலைநகரையும், உத்தரபிரதேசத்தையும் இணைக்கும் இந்த நடவடிக்கை மூலம், மக்களின் பயணம் எளிதாகும் என குறிப்பிட்டுள்ளார். நாட்டின் வளர்ச்சிக்கு உயர்தர கட்டமைப்பு வசதிகளை மக்களுக்கு வழங்க பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

----------------------------------

*நிர்மலா சீத்தாராமன்* (15)

பெண்களுக்கு அதிகாரம் அளிக்கும் திட்டங்களை மத்திய அரசு செயல்படுத்தி வருவதாக, மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீத்தாராமன் தெரிவித்துள்ளார். ஹரியானா மாநிலம் பானிபட்டில், நேற்று நடைபெற்ற பீமா சகி யோஜனா திட்ட தொடக்க விழாவில் பங்கேற்று பேசிய அவர், அடுத்த 3 ஆண்டுகளில் 2 லட்சம் மகளிரை காப்பீடு முகவர்களாக நியமிக்க மத்திய அரசு திட்டமிட்டுள்ளதாக தெரிவித்தார். நடப்பாண்டில் மட்டும், 25 ஆயிரம் பெண்கள் முகவர்களாக நியமிக்கப் படுவார்கள் என்றும் அவர் தெரிவித்தார். அவர்களுக்கு முதலாண்டு 7 ஆயிரம் ரூபாயும், 2ஆம் ஆண்டு 6 ஆயிரம் ரூபாயும், 3ஆம் ஆண்டு மாதம் 5 ஆயிரம் ரூபாயும் உதவித் தொகை வழங்கப்படும் என்றும் அவர் கூறினார். இந்த திட்டம் 10ஆம் வகுப்பு வரை கல்வி பயின்ற பெண்களுக்கு அதிகாரம் அளிப்பதை நோக்கமாக கொண்டுள்ளது என்றும், அவர் தெரிவித்தார். இதுபோன்று பெண்களுக்கு அதிகாரம் அளிக்கும் திட்டங்களுக்கு பட்ஜெட்டில் 3 லட்சத்து 30 ஆயிரம் கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளதாகவும், அமைச்சர் குறிப்பிட்டார்.

----------------------------------

எஸ்.எம். கிருஷ்ணா (16)

கர்நாடக மாநிலத்தின் முன்னாள் முதலமைச்சரும், முன்னாள் மத்திய வெளியுறவுத் துறை அமைச்சருமான எஸ்.எம் கிருஷ்ணா இன்று காலமானார். அவருக்கு வயது 92. கடந்த சில மாதங்களாக உடல் நலக்குறைவு காரணமாக மருத்துவ சிகிச்சை பெற்று வந்த நிலையில் அவர் இன்று அதிகாலை உயிரிழந்தார். அவரது அரசியல் பணியை போற்றும் வகையில், மத்திய அரசு அவருக்கு கடந்த ஆண்டு பத்ம விபூஷன் விருதை வழங்கியது. 1991ஆம் ஆண்டு முதல், 2004ஆம் ஆண்டு வரை அவர், கர்நாடக மாநில முதலமைச்சராகவும், 2004ஆம் ஆண்டு முதல், 2008ஆம் ஆண்டு வரை மஹாராஷ்ட்ர மாநில ஆளுநராகவும், அவர் பதவி வகித்துள்ளார். 2009ஆம் ஆண்டு முதல் 2012ஆம் ஆண்டு வரை அவர் மத்திய வெளியுறவுத் துறை அமைச்சராகவும் பணியாற்றி உள்ளார். இந்நிலையில், எஸ்.எம் கிருஷ்ணாவின் மறையையொட்டி, கர்நாடகாவில், 3 நாள் அரசுமுறை துக்கம் அனுசரிக்கப்படும் என்றும், முழு அரசு மரியாதையுடன் அவரது உடல் அடக்கம் செய்யப்படும் என்றும், அரசு தெரிவித்துள்ளது. எஸ்.எம் கிருஷ்ணாவின் மறைவுக்கு குடியரசுத் தலைவர், பிரதமர் உள்ளிட்டோர் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

----------------------------------

ரிசர்வ் வங்கி (7)

ரிசர்வ் வங்கி ஆளுநராக பதவியேற்க உள்ள திரு. சஞ்சய் மல்ஹோத்ராவின் திறமையான தலைமையின் கீழ், வரவிருக்கும் சவால்களை ரிசர்வ் வங்கி திறம்பட சமாளிக்கும் என்று, ரிசர்வ் வங்கியின் ஆளுநர் திரு. சக்தி காந்ததாஸ் நம்பிக்கை தெரிவித்துள்ளார். இதுதொர்பாக மும்பையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், ரிசர்வ் வங்கியின் ஆளுநராக அவர் பதவி வகித்த காலம் குறித்தும், அவர் பதவியில் இருந்து காலம் முழுவதும் கடைபிடித்த கொள்கைகள் குறித்தும் எடுத்துரைத்தார். மேலும், ரிசர்வ் வங்கிஎதிர்கொள்ளும் பல சவால்களையும் அவர் சுட்டிக் காட்டினார்.

----------------------------------

*காசநோய்* (11)

நாடு முழுவதும் கடநத 2015ஆம் ஆண்டை விட, 2023ஆம் ஆண்டில், காசநோயால் ஏற்படும் இறப்புகள் 21.4 சதவிகிதம் குறைந்துள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது. இதுதொடர்பாக மாநிலங்களவையில், எழுத்துப்பூர்வமாக பதில் அளித்த மத்திய சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை இணையமைச்சர் திருமதி அனுப்பிரியா பட்டேல், காசநோய் கடந்த 8 ஆண்டுகளில், 1 லட்சம் மக்கள் தொகைக்கு 28ல் இருந்து 22ஆக இறப்பு குறைந்துள்ளதாக தெரிவித்துள்ளார். இது கடந்த 2015ஆம் ஆண்டில் 1 லட்சம் மக்கள் தொகைக்கு 237ஆக இருந்தது என்றும், 2023ஆம் ஆண்டில், 195ஆக இருந்ததாகவும் அவர் தெரிவித்துள்ளார். காசநோய் இல்லாத இந்தியாவை உருவாக்க, தேசிய காசநோய் ஒழிப்பு இயக்கம் குறிப்பிடத்தக்க முயற்சிகளை மேற்கொண்டு வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

----------------------------------

*புத்தக கண்காட்சி (7)*

புதுச்சேரியில், 28ஆவது தேசிய புத்தக கண்காட்சி, வள்ளலார் சாலையில் உள்ள ஒரு தனியார் திருமண மண்டபத்தில் வரும் 13ஆம் தேதி தொடங்கி, 10 நாட்கள் நடைபெற உள்ளது. இதுகுறித்து இக்கண்காட்சியின் ஒருங்கிணைப்பாளர் பேராசிரியர் பாஞ். ராமலிங்கம் இன்று செய்தியாளர்களிடம் பேசுகையில், கண்காட்சி நடைபெறும் நாட்களில் தினமும் காலை 11 மணி முதல், இரவு 8மணி வரை பொது மக்கள் பார்வையிடலாம் என்று தெரிவித்தார். மேலும் அவர் கூறுகையில்,

(வாய்ஸ்)

----------------------------------

வானிலை (7)

தென்மேற்கு வங்கக் கடலில் நிலவும் காற்றழுத்தத் தாழ்வுப் பகுதி, ஆழ்ந்த காற்றழுத்தத் தாழ்வுப் பகுதியாக வலுப்பெற்றதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இது, அடுத்த 24 மணி நேரத்தில், இலங்கை-தமிழக கடலோர பகுதியை நோக்கி நகரும் என்றும், இதன் காரணமாக, கடலூர், நாகை, விழுப்புரம், செங்கல்பட்டு, சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர் உள்ளிட்ட 11 மாவட்டங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

----------------------------------

வீடு கட்டும் திட்டம் (9)

மத்திய அரசின் அனைவருக்கும் வீடு திட்டத்தின் கீழ், அடிப்படை வசதிகளுடன் உறுதியான வீடுகளை கட்டித் தருவதற்கு நிதி உதவி அளிப்பதற்காக, கடந்த 2016-17ஆம் ஆண்டு முதல், 2023-24ஆம் ஆண்டு வரையிலான கால கட்டத்தில், 2.95 கோடி வீடுகளை கட்ட இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மேலும், 2024-25 முதல், 2028-29 நிதியாண்டு வரை, மேலும் 5 ஆண்டுகளுக்கு இத்திட்டத்தை செயல்படுத்துவதற்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இத்தகவலை மத்திய ஊரக வளர்ச்சித் துறை இணையமைச்சர் டாக்டர் சந்திரசேகர் பொம்மசானி இன்று, மக்களவையில் கேள்வி ஒன்றுக்கு எழுத்துபூர்மாக அளித்த பதிலில் தெரிவித்துள்ளார்.

----------------------------------